AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 5 PRINTED SIZE: 256.00cmï¿½ REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 1,447.00 ITEM ID: MY0064243096



22 JUN, 2025

# FOMCA supports the implementation of the new electricity tariff

Tamil Malar (Sunday), Malaysia



## புதிய மின்சாரக் கட்டண அமலாக்கத்தை ஃபோம்கா ஆதரிக்கிறது!

நமது நிருபர்

கோலாலம்பூர், ஜூன் 22-
4ஆவது ஒழுங்குமுறை காலத்தின் கீழ் புதிய கட்ட மின்சார கட்டணத்தை அமல்படுத்துவதை மலேசிய பயனீட்டாளர் சங்கங்கள் சம்மேளனம் (ஃபோம்கா) முழுமையாக ஆதரிக்கிறது. இது காலத்திற்கேற்பத் துல்லியமான, முன்னோக்கு அணுகுமுறையாக மலேசிய குடும்பங்களுக்கு லாபகரமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஊக்கத் தொகை அடிப்படையிலான ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ் வரும் ஜூலை மாதம் 1ஆம் தேதி தொடங்கி 2027ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை அமல்படுத்தப்படவிருக்கும் புதிய கட்டணம் மிகவும் நியாயமான மற்றும் வெளிப்படையான மின்சார விலை நிர்ணயிப்பு முறையைக் காட்டுவதாக ஃபோம்காவின் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் டி.சரவணன் தெரிவித்தார்.



இத்திட்டம் மிகவும் சிக்கலான தருணத்தில், அதாவது பணவீக்கம், வாழ்க்கைச் செலவினங்கள் உயர்வால் மக்கள் அழுத்தத்தில் இருக்கும் போது அமல்படுத்தப்படுகிறது.

மறு ஆய்வு செய்யப்பட்ட கட்டண கட்டமைப்பு சராசரி அடிப்படை கட்டண விகிதத்தை மணிக்கு கிலோவாட் வெ.45.62லிருந்து 45.40ஆகக் குறைப்பதால் இதற்கு முன்பிருந்த கட்டணத்தைக் காட்டிலும் 19 விழுக்காடுக் குறைப்புக்கு வழி வகுக்கும். இந்த விகிதக் குறைப்புச் சிறியதாக இருந்தாலும் இது உள்ளூர் பயனீட்டாளர்களுக்குக் குறிப்பாக பி40, எம்40 பிரிவினருக்கு மிகப் பெரிய பாதுகாப்பை அளிக்கக்கூடிய புத்தாக்கக் கட்டமைப்பிற்கு ஆதரவாக உள்ளது. ஆற்றல் திறன் ஊக்கத் தொகை அறிமுகத்தினால் 1,000 கிலோவாட் அல்லது அதற்கும் குறைவாகப் பயன்படுத்தும் குடும்பங்கள் எந்த மின்சார கட்டண உயர்வையும் தவிர்க்கலாம். இது மின்சாரத்தைத் திறனுடன் பயன்படுத்துவோருக்கு வெகுமதி வழங்குவதோடு பொறுப்பான பயன்பாட்டையும் ஊக்குவிக்கும்.

புதுப்பிக்கப்பட்ட கட்டமைப்பில் இன்னும் விரிவான கட்டண முறை அதாவது மின்சார உற்பத்தி, திட்ட பயன்பாடு, வலையமைப்பு பயன்பாடு, கொள்ளளவு கட்டணம், சில்லறைச் செலவு ஆகியவையும் உள்ளடங்கியிருக்கும். இந்த வெளிப்படையான நிலை தங்களின் கட்டணச் சீட்டுத் தொடர்பில் பயனீட்டாளர்கள் புரிந்து கொள்ள அதிகாரத்தை வழங்குவதோடு கட்டணம் விதிக்கப்படுவதற்கான விளக்கத்தையும் அளிக்கும். இது பயனீட்டாளர்களிடையே நம்பிக்கையை அதிகரித்து பயன்பாட்டுக்கான முடிவை மிகவும் விவேகமாக எடுக்க வகை செய்யும் என்று செய்தியாளர்களிடம் பேசிய போது டாக்டர் சரவணன் குறிப்பிட்டார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.